1967, மார்ச் 23]

பதற்கென்று எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டபடியால், மற்ற மானியக் கோரிக்கைகளை யும் ஒவ்வொன்றாக அவையின் முடிவிற்கு விட்டு நிறைவேற்ற வேண்டும் என்று மன்ற முதல்வர் அவர்கள் தீர்மானம் கொண்டு வரலாம்.

6. அரசாங்கத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.
(இ) மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, "முதலில் விடப்பட்ட மானியக் கோரிக்கைகளை இப்பொழுது ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு, அவையின் முடிவிற்கு விட்டு, நிறைவேற்றலாம்" என்ற தீர்மானத்தை அவை முன் நான் வைக்கின்றேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் பற்றிய தீர்மானங்கள் பிற்பகல் 1.00 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று முன்னர் அறிவித்திருந்தேன். இப்பொழுது நேரம் 12-45 (பிற்பகல்) என்றாலும், இப்பொழுதே மற்ற மானியக் கோரிக்கைகள் பற்றிய தீர்மானங்களின் மீதும் வாக்கெடுப்பதற்கு இந்த அவை அனுமதிக்கிறது.

5. 1967-68-ம் ஆண்டிற்கான முன் மானியக் கோரிக்கைகள்மீது மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் III—பொது விற்பனை வரிகளும், ஏனையத் தீர்வைகளும்—நிர்வாகம்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க் கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :—

"கோரிக்கை எண் III— பொது விற்பனை வரிகளும், ஏனையத் தீர்வைகளும்—நிர்வாகம்—என்ற தலைப்பின் கீழ் 41,65,500 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்"

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் IV -முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க் கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் IV —முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்— என்ற தலைப்பின் கீழ் 8,15,900 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.